# முன்னுரை

காஞ்சி மடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி துறவு பூண்டு 50 ஆண்டுகள் ஆனதை சினிமாவின் நூறாவது நாள் விழா மாதிரி கொண்டாடி வருகிறார்கள். "அடுத்த பிரதமர் ஜெயேந்திரர் தான் என்று சிலர் கிண்டலடிக்கும் அளவுக்கு அவரது அரசியல் பாணி துறவறம் வளர்ந்து கொண்டிருப்பது வருத்தத்திற்குரியது. இப்படிச் சொல்வதால் அந்த பீடத்தின் மீது நமக்குள்ள மதிப்பு இம்மியும் குறைவு பட்டுவிடாது" என்று கல்கி இதழ் - எழுதுகிறது. ஒருவர் துறவியானதைக் கொண்டாட வேண்டுமா என்றால் ஜயேந்திரர் விஷயத்தில் அவசியம்தான். ஏனென்றால் 16 வருடங்களுக்கு முன்பு தன் தண்டத்தைப் போட்டுவிட்டு நள்ளிரவில் மடத்தை விட்டு ஓடிப்போனவர் அவர். பிறகு திரும்பி வந்து தொடர்ந்து துறவியாக இருப்பது எப்படிப்பட்டது என்பதற்கு வரலாற்றிலிருந்து இதோ சாம்பிள் !

1983 ல் ஜயேந்திரர் அழைத்ததன் பேரில் அவரை சந்தித்த சின்னக்குத்தூசி, உடன் சென்ற ஞாநி இருவரும் எதிரொலியில் எழுதிய கட்டுரைகள் அதற்கு 'சோ' வின் மறுப்பு, மறுப்புக்கு மறுப்பை வெளியிட மறுப்பு, முதலியவை தொகுத்து வெளியிடப் படுகிறது.